கின்றன என்று ஒவ்வொரு உறுப்பினரையும் கேட்டிருக்கிறோம். அவைகளை இப்பொழுது தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். பரிசீலனையின் பொழுது இப்பொழுது சொன்ன கருத்துக்களையும் சேர்த்து அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை

*வினா எண் 256—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஏற்கனவே தமிழ் நாட்டில் நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) மற்றுமொரு புதிய தொழிற்சாலை நிறுவ மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இப் புதிய தொழிற்சாலை 1981—82-ல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் குளோரைட் எவ்வளவு ? இப்பொழுது தமிழ் நாட்டில் எவ்வளவு தயாராகிறது? வெளி மாநிலங்களிலிருந்து ஏதாவது வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே ஆண்டொன்றுக்கு 4,825 டன் அளவிலே தயாரிக்கின்ற தொழிற்சாலை இயங்கி வருகின்றது. வளர்ந்து வருகின்ற தீப்பெட்டித் தொழிலின் தேவைகளைக் கருதி அதனுடைய விரிவாக்கமாக டிட்கோ உதவியோடு இராம நாதபுரம் மாவட்டம், புலியூர் என்ற இடத்தில் ஏறத்தாழ மூவாயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக நூற்றைம்பது பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத் தக்க வகையில் ஏறத் தாழ ஒரு கோடி ரூபாய் அளவில் இந்தத் தொழிற்சாலை நிறுவப் பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. 1981—82 இல் தன் னுடைய உற்பத்தியை அந்த நிறுவனம் துவக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மற்றப்படி, தீப்பெட்டித் தொழிற்சாலை

1981 பிப்ரவரி 9]

களுக்கு மொத்தம் எவ்வளவு தேவை என்று கேட்டார்கள். அதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் அதைப் பற்றிச் சொல்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கோவில்பட்டி, கழுகுமலை, சாத்தூர், சிவகாசி, சென்னை போன்ற இடங்கள் வேறு எந்தத் தொழிலும் இல்லாத பகுதி. இப்படிப்பட்ட குளோரைட் தட்டுப்பாட்டின் காரணமாக தொழில் முடக்கமாகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப் படுகிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் ஏறத்தாழ 5,000 டன்—4,825 டன் அளவிலே, மதுரை மாவட்டத்தில் நரசிங்கப்பட்டி, என்ற இடத்தில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் படுகிறது. 3,000 டன் ஏற்கனவே குறிப்பிட்டதைபோல இராமநாதபுரம் மாவட்டம் புலியூர் என்ற இடத்தில் உற்பத்தி செய்ய இருக்கிறது. இந்த இரண்டு நிறுவனங்களும் முழு அளவில் உற்பத்திச் செய்யும்பொழுது ஓரளவிற்குப் பற்றாக்குறை இல்லாமல் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்பற்றி அரசு பரிசீலிக்கும், நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு என்னென்ன விதிமுறைகள் அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ளன ? இது தனியார் துறையா அல்லது கூட்டுறவு துறையா அல்லது அரசாங்கத் துறையா ? புதிதாக அரம்பிக்கப்படவிருக்கின்ற தொழிற்சாலை கூட்டுறவுத் துறையால் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா அல்லது தனியார் துறையால் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா ? அல்லது இரண்டும் இணைந்த துறையால் ஆரம்பிக்கப் பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிட்கோ உதவியுடன் என்று அமைச்சர் சொன்னாரே, டிட்கோ என்றால், அரசுத் துறை உதவிதான்.

செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை

* வினா எண் 257—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செயற்கை வைரக்கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசிடம் தனியார்கள் அனுமதி கோரியுள்ளார்களா ?